**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF JUDGE.**
**KANNIYAKUMARI AT NAGERCOIL.**
**RLTOP. NO. 1/2025**

Deposition of the witness: PW1.
Date :20.01.2026.

Solemnly affirmed by Mrs. R. Sathya Bench Clerk in accordance with the provision of Act X of 1873.

| | |
|---|---|
| Name | சங்கம் ஷேக் அப்துல் காதர் |
| Father's Name | அப்துல் ரசாக் |
| Village | வடிவீஸ்வரம் |
| Taluk | அகஸ்தீஸ்வரம் |
| Calling | Admin Peritum partners- chennai. |
| Age | 28 |

முதல் விசாரணை

நான் இந்த வழக்கில் மனுதாாரும் பவரும் ஆகும் என் தரப்பு சாட்சியத்திற்கு நான் எழுத்து மூல பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். வழக்கறிஞருக்கு நான் சொல்லி தயார் செய்யப்பட்டு என்னால் படித்துப் பார்க்கப்பட்டு பின்பு கையொப்பம் செய்யப்பட்டது. கீழ்க்கண்ட ஆவணங்களை எனது தரப்பு சான்றாவணமாக குறியீடு செய்யக் கேட்டுக்கொள்கிறேன்.

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | 01.06.2022 | 1 ம் எதிர்மனுதாரர் மற்றும் மனுதாரர் செய்து கொண்ட வாடகை உடன்படிக்கை | நகல் |
| ம.சா.ஆ.2 | | ஜீன் 2022 முதல் ஜீன் 2023 வரை வங்கி கணக்கு விபரம் | அசல் |
| ம.சா.ஆ.3 | | மே 2022 முதல் டிசம்பர் 2023 வரையிலான வாடகை பாக்கி கணக்கு விபரம் | அசல் |
| ம.சா.ஆ.4 | 12.06.2023 | அ.வ.எண்.100/2023 ன் பிராது | அலுவலக |

| | | | |
|---|---|---|---|
| | | | நகல் |
| ம.சா.ஆ.5 | | 2 ம் எதிர்மனுதாரருக்கு அனுப்பப்பட்ட பதில் கடிதம் | அலுவலக நகல் |
| மசாஆ,6 | 20.07.2023 | 2 ம் எதிர்மனுதாரரால் மனுதாரருக்கு அனுப்பப்பட்ட கடிதம் | நகல் |
| மசாஆ,7 | 24.07.2023 | மனுதாரரால் 2.ம் எதிர்மனுதாரருக்கு அனுப்பப்பட்ட கடிதம் | அலுவலக நகல் |
| மசாஆ,8 | 08.08.2023 | 2 ம் எதிர்மனுதாரரால் மனுதாரருக்கு அனுப்பப்பட்ட இணைப்பு கடிதம் | நகல் |
| மசாஆ,9 | 17.08.2023 | மனுதாரரால் 2.ம் எதிர்மனுதாரருக்கு அனுப்பப்பட்ட பதில் கடிதம் | அலுவலக நகல் |
| மசாஆ,10 | 21.08.2023 | மனுதாரரால் 1 ம் எதிர்மனுதாரருக்கு பதில் தபால் மூலம் அனுப்பப்பட்ட கடிதம் ஒப்புகை சீட்டுடன் | அலுவலக நகல் |
| மசாஆ,11 | 25.08.2023 | 1 ம் எதிர்மனுதாரரால் மனுதாரருக்கு அனுப்பப்பட்ட கடிதம் | அசல் |
| மசாஆ,12 | 04.09.2023 | மனுதாரரால் எதிர்மனுதாரருக்கு அனுப்பப்பட்ட வழக்கறிவிப்பு | அலுவலக நகல் |
| மசாஆ,13 | | எதிர்மனுதாரர்களால் திருப்பி அனுப்பப்பட்ட வழக்கறிவிப்பு | அசல் |
| மசாஆ,14 | | தமிழ்நாடு மின்சாரதுறையால் மனுதாரருக்கு அனுப்பப்பட்ட அறிவப்பு | அசல் |
| மசாஆ 15 | | மின்கட்ட ரசீது | கணினியில் பதிவு செய்யப்பட்டது |

பிராதுபடி தீர்ப்பாக வேண்டுகிறேன். கற்றறிந்த எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் மசாஆ 1, 6, 8 ஆகிய ஆவணங்கள் நகல் என்றும் மாற்றம் செய்வதற்கு வாய்ப்புகள் அதிகமாக

உள்ளது என்றும் சான்றிட்ட நகல் பெற்று தாக்கல் செய்ய வாய்ப்பு இருந்தும் மனுதார் பயன்படுத்த வில்லை என்பதால், மேற்படி 3 ஆவணங்கள் ஏற்புடைய ஆவணங்கள் இல்லை என்றும் கடுமையான ஆட்சேபனை செய்துள்ளார். அது பதிவு செய்யப்படுகிறது.

குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.